வீடுகள் கட்டிக் கொடுக்க நிலம் கையகப்படுத்தித் தந்தார்கள். ஆக, அது இந்த வருடம் நிறைவேற்றப்பட இருக்கிறது. மற்றும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு உள்ள படிப்பு வசதி போன்ற உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு ஆலோசித்து ஆவன செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைய பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இது முக்கியமாக இருக்கிறது. பல பெண்களும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாஸ் புத்தகம் தராமல் அவர்களுடைய கணவன் பெயரில் அதைத் தருகிறார்கள். ஏனென்றால் அவர்களின் பெயரில் தந்தால் மெட்டர்னிட்டி லீவ் மற்றும் சலுகைகளைத் தரவேண்டியிருக்கும், தராமல் இருப்பதற்காக அதை இப்படிச் செய்கிறார்கள். மற்றும் இதுபோன்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. இக்குறைகளை நீக்குகின்ற வகையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு கூலியை $9\frac{1}{2}$ ரூபாய் என்று இருந்ததை 14 ரூபாயாக ஆக்கியிருக்கிறது. கூலி மட்டுமல்ல, இதுபோன்ற பல சலுகைகள் தரத் தனியாக ஒரு வாரியம் அல்லது குழு அமைத்து அவர்களுடைய குறைகளைப் போக்க இந்த அரசு முன்வருமா ?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். தனியாக நல வாரியம் அமைக்கத் தேவையில்லை, ஆலோசனைக் குழு மூலமாகவே, நல்ல முறையில் செயல்படுமென்று. பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்குள்ள குறைகளைக் குறைப்பதற்கும் இந்த அரசு முயற்சி எடுக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் பெண்களும், சிறுவர்களும் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அரசு நியமித்து இருக்கின்ற குழுக்களில், பெண் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

கண்டமங்கலத்தில் ஐ.டி.ஐ. ஏற்படுத்துதல்.

*5183 திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1990 மார்ச் 31]

தென் ஆற்காடு மாவட்டம் கண்டமங்கலத்தில் ஒரு ஐ.டி.ஐ. நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ச. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதி என்பது, புதுவை மாநிலத்தினுடைய அண்டைப் பகுதியில் இருக்கக்கூடிய, தொழில் நகரங்கள் அடங்கியிருக்கக் கூடிய ஒரு பகுதி. இந்த அரசு படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையிலே, ஒரு ஐ.டி.ஐ. தொடங்க உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலம் பகுதியிலே அதைத் தொடங்க இந்த அரசுக்கு உத்தேசம் ஏதும் இல்லை. ஏனென்றால், தென்னாற்காடு மாவட்டத்தில், 5 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும், 10 தனியார் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களும் இருக்கின்ற காரணத்தால், புதிதாக அங்கு தொடங்க உத்தேசம் இல்லை.

திரு. ச. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு உத்தேசம் இல்லையென்றாலும் கூட, தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய மற்ற பயிற்சி நிலையங்களிலாவது, கூடுதலாக இடங்களை ஒதுக்கீடு செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பரிசீலித்து, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கும் இடம் கிடைக்கின்ற வகையிலே, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் பிடிக்க பயன்படுத்தும் சாதனங்கள்.

*1315 திரு. இரா. மதிவாணன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீன் பிடிக்கப் பயன்படுத்தும் கட்டுமரம், வலை, நூல் மற்றும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் போன்ற சாதனங்களை மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?